நடந்துகொண்டிருந்தன. அவர்கள் வாங்குவதில் சிரமங்கள் உள்ளன. ஏழைப்பட்ட, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள கூலி வேலை செய்பவர்கள் ஒரு நாள் முழுமையாக வரிசையில் நின்றாலும், சில நாட்களில் வாங்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே அதை மாற்றி அந்தந்த நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் வழங்குவதைப்பற்றி ஏற்கெனவே விவரமாகச் சொன்னேன். அந்தந்தக் கடைகளிலே, இன்னின்ன தேதிகளிலே, இந்தெந்த அட்டைகளுக்கு வழங்க வேண்டும் என்று, எழுதிவைக்கவேண்டுமென்றும், அந்தத் தேதிகளிலே அந்த அட்டைதாரர்கள் வந்து சுலபமாக பெற்றுக்கொண்டு போகலாம் என்ற விவரமும் அரசாணை மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் செயல்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 329, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

329—

மாவட்டத்துடன் இணைத்தல்

***19810—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், இளையரசனேந்தல் பிர்க்காவிலுள்ள 13 பஞ்சாயத்து கிராமங்களை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்துடன் இணைக்கும் திட்டம் குறித்து அரசு ஆணை பிறப்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2002 மே 9]

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கை பெறப்பட்டதும் ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வருவாய் வட்டத்திலுள்ள இளையரசனேந்தல் பிர்க்காவிலுள்ள 13 பஞ்சாயத்து கிராமங்களை, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வருவாய் வட்டத்துடன் இணைப்பது சம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு, ஆய்வில் உள்ளது என்ற ஓர் அறிவிப்பை அறிவித்ததற்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையானது அப்பகுதி மக்களது நீண்டநாள் கோரிக்கையாகும். கடந்த 1991-1996 ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்திலே அந்தப் பகுதி மக்கள் மிகவும் ஆவலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய தேதியிலே அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் பதவியை ஏற்ற பின்பு, ஆய்விலே உள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக நான் அறிந்துகொண்டேன். இப்பணி ஆய்வு செய்யப்பட்டு எப்பொழுது முடிவு அறிவிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தினுடைய 13 கிராமங்களை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்துடன் இணைப்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடமிருந்து இந்தக் கிராமங்களை இணைக்கலாம் என்ற ஓர் அறிக்கை வந்திருக்கிறது. மேலும் இந்த அறிக்கை மீது Principal Commissioner and Commissioner of Land Administration முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையருடைய பதிலைக் கேட்டு உடனடியாக அரசு இதற்கான தக்க நடவடிக்கை எடுக்கும்.

[2002 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. இராசேந்திரன்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 330, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

330—

தொண்டு நிறுவனங்கள்

***13508—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டு உதவிபெறும் சிறுபான்மை தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றனவா?

(ஆ) தவறு செய்த அமைப்புகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வெளிநாட்டு உதவி பெறும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் சமூக நலத் துறையின் மூலம் கண்காணிக்கப்படுவதில்லை. மாநில மற்றும் மத்திய அரசு மானிய உதவிபெறும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் மட்டுமே சமூக நலத் துறையின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் வெளிநாட்டு உதவிபெறும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள்பற்றி கண்காணிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய பலபேர் தொண்டு நிறுவனங்களை சிறுபான்மையினர் என்ற பெயரிலேயும், பல்வேறு பெயர்களிலே பதிவு செய்துவிட்டு, வெளிநாடுகளிலேயிருந்து